DEPOSITION OF WITNESS

CHAPTER CODE OF CIVIL PROCEDURE

IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FTC), THENI.

# OS.No.58/2016

Deposition of Witness : DW1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி.சிந்துஜா | ஜாதி | : | -- |
| அப்பா பெயர் | : | | தொழில் | : | ஆசிரியர் |
| கிராமம் | : | | சமயம் | : | -- |
| தாலுகா /மாவட்டம் | : | | வயது | : | /2025 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.04.2025.

**(சாட்சி ஆதார் அடையாள அட்டை மூலம் அடையாளம் காணப்பட்டார்). சாட்சி அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்யப்பட்டார்.**

**வா.த.கு.வி.:**

கேள்வி : உங்களுக்கும் வாதிக்கும் கடந்த 2010 முதலே பிரச்சனைகள் இருந்து வருகிறது சரிதான் என்றால்?

பதில் : சிறு சிறு பிரச்சனைகள் இருந்தது.

கேள்வி : உங்கள் தாத்தா சீனிவாசன் உயில் எழுதிய தேதி 10.10.2012 சரிதான் என்றால்?

பதில் : சரி.

கேள்வி : அந்த சமயத்தில் அவருடைய உடல் நிலை மிக மோசமாக இருந்தது என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்கள் தாத்தா வீட்டில் படுத்த படுக்கையாக உடல்நிலைய சரியில்லாமல் இருந்தாரா என்றால்?

பதில் : சரியல்ல. அவர் இறக்கும் வரை மகாலட்சுமி பைப் டிரேடர்ஸ் நிறுவனத்திற்கு பங்குதாரர் மற்றும் மேனஜர் என்ற முறையில் சென்று வந்து கொண்டுருந்தார்.

கேள்வி : உங்கள் தாத்தா இறந்தது 14.10.2012 என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்கள் தாத்தா 10.10.2012 ல் உயில் எழுதி நான்கு நாட்கள் கழித்து 14.12.2012 ல் இறந்துவிட்டார் என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்கள் தாத்தா எப்படி இறந்தார் என்று கேள்விபட்டீர்களா?

பதில் : உடலில் குறைந்த சர்க்கரை அளவினால் மரணம் அடைந்ததாக சொன்னார்கள்.

கேள்வி : உங்கள் தாத்தா இறக்கப் போகிறார் என்பதை நன்கு அறிந்தே அவரை கட்டாயப்படுத்தி பி.த.சா.ஆ. 3 ன் உயிலை உங்கள் மகன் S.R. ஹரின் அதாவது இந்த வழக்கின் 5 வது பிரதிவாதி பெயருக்கு எழுதி வாங்கி பதியப்பட்டது என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்கள் தாத்தா சீனிவாசன் மனப்பூர்வமாக உயிலை எழுதி வைத்திருந்தால் அவர் நல்ல உடல்நிலை, நல்ல மனநிலையில் இருக்கும் போதே எழுதி வைத்திருப்பார் என்றால்?

பதில் : தவறு.

கேள்வி : உங்கள் தாத்தா சீனிவாசன் ஆசிரியராக இருந்து ஓய்வு பெற்றவர் என்றால்?

பதில் : சரி

கேள்வி : பி.வா,த.சா.ஆ.3 ல் உள்ள சீனிவாசனின் கையெத்து ஒவ்வொரு பக்கமும் வெவ்வேறு விதமாக உள்ளது என்றால்?

பதில் : சரியல்ல

கேள்வி : உங்கள் தாத்தா விருப்பமில்லாமல் கட்டாயத்தின் பேரில் கையெழுத்து போட சொன்னதால்தான் ஒவ்வொரு பக்கத்திலும் மாறி மாறி கையெழுத்து உள்ளது என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : பி.வா.சா.ஆ.4 பிரகடன மனு கடந்த 11.02.2013 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டது என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : இந்த பிரகடன மனுவில் சீனிவாசனின் வாரிசுகளை தரப்பினராக எதிர் வாதிகளாக சேர்க்கவில்லை என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : பி.வா.சா.ஆ.5 மற்றும் பி.வா.சா.ஆ.6 பட்டாக்கள் உயிலின் அடிப்படையில் தான் பெறப்பட்டது என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : அந்த பட்டாக்கள் அனைத்தும் இந்த வழக்கு நிலுவையில் உள்ள போது

தான் பெறப்பட்டது என்றால்?

பதில் : சரிதான். என் மகன் 18 வயது பூர்த்தி அடைந்ததால்தான் பெறப்பட்டது.

கேள்வி : உங்கள் மகன் பெயருக்கு பட்டா மாறுவதற்கு முன்பு உங்கள் தாத்தா பெயரில் தான் பட்டா இருந்தது என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : அந்த உயிலில் உங்கள் தாத்தா அவருக்கும் அவருடைய மகனுக்கு மட்டும் ஏற்பட்ட வாய் வழி பாகப்பிரிவினை மூலம் கிடைத்த சொத்தில் பாதியை உங்கள் மகனுக்கு எழுதி வைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால்?

பதில் : சரிதான்.

கேள்வி : உங்கள் கணவர் உங்கள் பெயருக்கு பிராது சொத்தில் சில சொத்துக்கள் சம்பந்தமாக ஒரு தான செட்டில்மென்ட் .வா.த,சா.ஆ.8 எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் ?

பதில் : சரிதான்.

கேள்வி : அந்த சொத்து உங்கள் கணவருக்கு எந்த ஆவணத்தின் அடிப்படையில் கிடைத்தது என குறிப்பிடவில்லை என்றால்?

பதில் : சரிதான். ஆனால் அந்த சொத்து தாத்தா சீனிவாசனுக்கு சொந்தமானது. என் கணவர் தான் அதை பராமரித்து வந்தார்.

கேள்வி : உங்கள் கணவருக்கு அப்படி தான செட்டில்மென்ட் எழுதிக்கொடுக்க சட்டப்படி தகுதியில்லை என்றால்?

பதில் : சரியல்ல.

கேள்வி : உங்கள் தாத்தா உங்கள் மகனுக்கு உயில் எழுதி வைக்கும் போதே உங்கள் கணவருக்கும் உயிலாகவே சொத்தை எழுதி கொடுத்திருக்கலாம் அல்லது தான செட்டில்மென்ட் மூலமாக ஒரு ஆவணமாக எழுதிக்கொடுத்திருக்கலாம் என்றால்?

பதில் : என் கணவர் பராமரித்ததால் அவ்வாறு எழுதவில்லை. ஆனால் என் தாத்தா என் மகனுக்கு எழுதிய உயிலில் சில சொத்துக்களை என் கணவருக்கு வாய்மொழியாக வைத்துக்கொள் என கொடுத்ததாக குறிப்பிட்டுள்ளார்.

கேள்வி : ஒரு சொத்தில் அது சம்பந்தப்பட்ட மூல அவணங்கள் இல்லாமல் மற்றும் மூல ஆவணத்தை குறிப்பிடாமல் அந்த சொத்தை வேறு ஒரு ஆவணத்தில் உள்ள வாசகங்களை வைத்து நீங்களோ, உங்கள் கணவரோ உரிமை கொண்டாட முடியாது என்றால்?

பதில் : அப்படி அல்ல. நீங்கள் அப்படி சொல்ல முடியாது. அனைத்தும் உயிலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கேள்வி : நீங்கள் இந்த வாதிக்கு சட்டப்படி நியாயமாக கிடைக்க வேண்டிய பங்கை தடுப்பதற்காகவும், இடையூறு செய்வதற்காகவும் இந்த வழக்கில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் ?

பதில் : தவறு, என் தாத்தாவிற்கு 1961ஆம் ஆண்டு தனித்து பிரிக்கப்பட்ட அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தை அவர் விருப்பப்படி எழுதிக்கொடுத்துள்ளார்.

மறுவிசாரணை – இல்லை.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு, அவரால் சரி 04.04.2025 அன்று வெள்ளிக்கிழமை சாட்சியால் கையொப்பமிடப்பட்டது.

GOPINATHAN S

Digitally signed by GOPINATHAN S
Date: 2025.04.05 17:26:46 +0530

கூடுதல் மாவட்ட நீதிபதி. தேனி.
04.04.2025